

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற 72 வது அனைத்திந்திய கூட்டுறவு விழாவில் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட திருப்புவனம் பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் த.சேங்கைமாறனிடம் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் கூட்டுறவு இணைப்பதிவாளர் கோ.ராஜேந்திரபிரசாத். செயலாளர் கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.



திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.,கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோரின் ஆலோசனைப்படி,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.அறிவுறுத்தலின்படி (SIR) படிவங்களை பூர்த்தி செய்யும் முகாம் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி 23வது வார்டு 219வது வாக்கு சாவடியில் கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி தலைமையில் வட்ட கழக செயலாளர் பொன்னையா பாண்டியன் முன்னிலையில் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் துவக்கிவைத்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஜெய்கணேஷ்,உசைனி, அந்தோணிராஜ்,சிவகாமிநாதன், பாபநாசம்,வேலாயுதம்,கண்ணன், விஸ்வநாதன்,இந்து,சுப்புலெட்சுமி, தேவி,சிவசங்கரி,தமிழ் முருகன், செல்வம்,பண்டாரம்,காளிதாஸ், ராமசந்திரன்,மணிகண்டன், ஜெயபிரகாஷ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போடி மேற்கு ஒன்றிய மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி பகுதிகளில் தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி.எஸ்.ஐ.ஆர். பணியை ஆய்வு செய்தார். உடன்போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், போடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான லட்சுமணன் மற்றும் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



விளாத்திகுளம் பேரூராட்சி 1வது வார்டு சத்யாநகரில் சாலை அமைப்பதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாராமன் உள்ளிட்டோர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சவுதி அரேபியாவிற்கு புனித உம்ரா பயணம் மேற்கொண்ட

# ஐதராபாத்தைச் சேர்ந்த யாத்ரீகர்கள் 45 பேர் பேருந்து விபத்தில் உயிரிழப்பு!

## இ.யூ.முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் இரங்கல்!

*திருச்சி, நவ. 20 -*

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது :

சவுதி அரேபியாவில் உள்ள மெக்கா, மதினாவுக்கு புனித உம்ரா பயணம் மேற்கொண்ட ஐதராபாத்தைச் சேர்ந்த யாத்ரீகர்கள் 45 பேர், பேருந்து விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு துக்கமும் துயரமும் அடைந்தேன்.

இஸ்லாமிய மார்க்கத்தில் ஐந்தாவது புனித கடமையான புனித ஹஜ் பயணம் இருக்கிறது. மற்ற நாட்களில் முஸ்லிம்கள் மெக்கா, மதினாவுக்குச் சென்று கஃபாவை வலம் வந்து, மற்றுமுள்ள புனித இடங்களில் பிரார்த்தனையில் ஈடுபடுவதை 'உம்ரா' பயணம் என்று அழைக்கின்றனர். புனித உம்ரா பயணம் மேற்கொண்ட ஐதராபாத் சேர்ந்த பயணிகள் 45 பேர் திருமக்காவில் இருந்து நபிகள் நாயகம் அடங்கி யிருக்கும் மதினாவை நோக்கிப் பயணித்த தருணத்தில் யாத்ரீகர்கள் சென்ற பேருந்து மீது டாங்கர் லாரி மோதியதால் உம்ரா யாத்ரீகர்கள் 45 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பலியாகிய துயரச் சம்பவம் நெஞ்சை உலுக்குவதாக உள்ளது. இந்த துயரச் செய்தி அறிந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் பொது வாழ்வில் உள்ள அனைத்து இயக்கத்தவர்களும் தங்களின் ஆழ்ந்த துயரங்களைத் தெரிவித்து இருக்கின்றனர்.

புனித உம்ரா பயணிகளின் மரணச் செய்தி உலக முஸ்லிம்களின் இதயங்களை மட்டுமின்றி உலக மக்களின் இதயங்களையும் உலுக்கிய இருக்கி றது. மறைந்தவர்கள் இறையருளுக்கு உரியவராகவும் அவர்களை இழந்திருக்கும் அவர்தம் குடும்பத்திருக்கு இறைவன் ஆறுதலையும் பொறுமையையும் தந்து அருள் புரியவும் எல்லோரும் வேண்டுவோம். உலகம் அமைதி யில் செல்லவும், எல்லாக் காலங்களிலும் இறையருள் எங்கும் சூழ்ந்திரு க்கவும் வேண்டுவோம்.

ஐதராபாத் மல்லேபல்லி, பஜார் காட், ஆசிஃப் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இஸ்லாமிய குடும்பத்தாருக்கு அவர்களது பிரிவை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியை அல்லாஹ் கொடுப்பானாக என்று பிரார்த்திப்போம். அவர்களது பிழைகளை பொறுத்துக் கொண்டு ஜன்னத்துல் பிர்ஃதௌஸ் என்னும் பேராணந்த பெரும் வீட்டை இறைவன் அவர்களுக்கு வழங்குவானாக அவர்களின் மறைவால் வாடும் அவர்களது மக்கள் உற்றார் உறவினர்கள் அனை வருக்கும் சபுரன் ஜமீலன் என்னும் அழகிய பொறுமையை வழங்குவதற்கு இறைஞ்சுவோம். எனது சார்பிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளியில் பாரத சாரண – சாரணிய இயக்கம் தொடங்கி 50 ஆண்டுகள் கடந்ததை முன்னிட்டு நடைபெற்ற பொன்விழா கொண்டாட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்க தலைவருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி முன்னிலையில் பொன்விழா மலரை வெளியிட்டார். உடன் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், அய்யப்பன், உசிலம்பட்டி நகர் கழக செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கல்வித் துறை அதிகாரிகள், சாரண சாரணியர் இயக்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என திரளானோர் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாநகராட்சி 5 வது வார்டுக்கு உட்பட்ட ஆர்.எம்.காலனி பூங்காவினை கழக கிழக்கு மாவட்ட செயலாளரும், பழநி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் திறந்து வைத்தார். உடன் மேயர் இளமதி, துணை மேயர் ராஜப்பா, மாநகராட்சி ஆணையர் செந்தில் முருகன், மண்டல தலைவர்கள் பிலால் உசேன்,ஆனந்த், ஜான் பீட்டர்,மாமன்ற உறுப்பினர் சுவாதி, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பகுதி பொறுப்பாளர்கள் சந்தோஷ்முத்து, ஜானகிராமன்,சூசை, ராஜேந்திர குமார், பஜ்லுல் ஹக், சந்திரசேகர்,மாவட்ட பிரதிநிதி குமார்,வார்டு செயலாளர் காசிப்பாண்டி, மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார்,மாநகர வர்த்தகரணி அமைப்பாளர் தாஜ்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த முகாம் (SIR) சங்கரன்கோவில் நகரப் பகுதியில் நடைபெற்ற முகாம்களில் திடீர் ஆய்வு பணி மேற்கொண்டார்.நிகழ்வில் நகர செயலாளர் மு.பிரகாஷ்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால்,இளைஞரணி ஜான்சன் உள்பட பாக முகவர்கள் (BLA2)பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA) மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.அப்போது கழக நிர்வாகிகளுக்கு உரிய அறிவுரைகளை மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.வழங்கினார்.



தேனி வடக்கு மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் தொகுதியில் தாமரை குளத்தில் வ.உ.சி. நினைவு நாளை முன்னிட்டுஅவருடைய திருவுருவச் சிலைக்கு சரவணகுமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் தாமரை குளம்பேரூராட்சி தலைவர் பால்பாண்டி பேரூர் செயலாளர் கர்த்தராசு. மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சிவராமகிருஷ்ணன். வார்டு செயலாளர்கள்பழனி முருகன் தேவராஜ். டென்ஷன். ஜாகிர் உசேன், இளைஞர் அணி பொன் செல்வம் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்



வேலூர் வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி ஆலோசனை கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் பேசினார்.உடன் இளைஞர் அணி சீனிவாசன்,ராஜமார்த் தாண்டன், சத்தியமூர்த்தி, டிடாசரவணன்,கோ.முரளி பாஸ்கர்,கே.சி. சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.